Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்


முச்சந்தி முரளி



"வாகனங்கள் ஓடுறது டீசலில அரசியல் ஓடுறது டீலில"

சுடர் : 39
கதிர் : 295
திங்கட்கிழமை
16 செப்ரெம்பர் 2024
ஆவணி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப். 16
12 தினங்கள் அஹிம்சை வழியில் உண்ணா விரதமிருந்து உன்னத இலட்சியத்துக்காக உயிர்நீத்த தியாகதீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை திலீபன் உண்ணாநோன்பை ஆரம்பித்த நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் உண்ணாநோன்பு

11

## மத்திய வங்கியால் 'என்ரிச் லைப்' தடை

யாழ்ப்பாணம், செப். 16
'த என்ரிச் லைப்' என்ற தனியார் நிறுவனத்தை தடை செய்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. மேற்படி நிறுவனம்

11

# நன்கொடையாளர் மாநாடு நடத்த ரணிலுக்கு இயலுமையில்லை!!!

கிளிநொச்சியில் வைத்து சஜித் சாடல்

**கிளிநொச்சி, செப்ரெம்பர் 16**

ஐந்து தடவைகள் பிரதமராக இருந்த தற்போதைய பதில் ஜனாதிபதி வடக்கு - கிழக்கு மக்களை சந்திக்கிறார். அவரால் வடக்கு - கிழக்கு மக்களுக்காக நன்கொடையாளர்கள் மாநாட்டைக் கூட்டுவதற்கான இயலுமை அவரிடம் இல்லாத காரணத்தால் அந்த மாநாட்டை கூட்டவில்லை. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

11

## வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், செப். 16
சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

11

## சஜித்தின் மேடையில் சுமந்திரன், சி.வி.கே.

யாழ்ப்பாணம், செப். 16
ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பரப்புரைக் கூட்டம் மானிப்பாயில் நேற்று இடம்பெற்றது. பரப்புரை மேடையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் பங்கேற்று தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

11

## நாமலுக்கும் சஜித்துக்கும் என்ன 'டீல்'?

கட்சி தாவிய தலதா கேள்வி

கொழும்பு, செப். 16
டீல் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறினாலும், ஏற்கனவே நாமல் ராஜபக்ச மற்றும் 'ஹிரு' அலைவரிசை

11

## பொதுவேட்பாளருக்கு உயிர் அச்சுறுத்தல்

பிரதிப் பொலிஸ்மா அதிபர் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 16
ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரனுக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவித்து பொலிஸார் அவசர கடிதத்தை அவருக்கு

11

## கிளிநொச்சியில் வீதி விபத்துகளால் 2 மாதங்களில் 7 பேர் சாவு

கிளிநொச்சி செப். 16
கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு மாதங்களுக்குள் வீதி விபத்துகளால் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

11

## தரம் - 5 பரீட்சைப் பெறுபேறு 40 நாட்களுக்குள்

கொழும்பு, செப். 16
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 40 நாட்களுக்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கைப்

11

## நாட்டு மக்களுக்கு அதிகளவிலான நிவாரணங்களை வழங்கியது நாமே

மார்தட்டுகிறார் ரணில்

கொழும்பு, செப். 16
பொருளாதாரத்தின் வளர்ச்சியுடன், நாங்கள் மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்குகிறோம். அடுத்த ஆண்டு இறுதிக்குள் மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைப்பதே எமது பிரதான நோக்கமாகும். இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

11



- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீள்கட்டுமானத்திற்கான சர்வதேச நிதியளிப்போர் மாநாடு நடைபெறும்.
- 13 வது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துதல்.

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகத்தை மாற்றுவது மாற்றமல்ல! பொருளாதார வலுவே மாற்றம்

## ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 16

**மாற்றம் என்பது முகத்தை மாற்றுவது அல்ல. இந்தப் பொருளாதார, அரசியல் முறைமைகளை மறுசீரமைக்க வேண்டும். 2048க்குப் பொருத்தமான ஒரு சமூக மாற்றத்தை நோக்கி நாம் நகர வேண்டும். எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாக இந்தத் தேர்தல் அமையவேண்டும்.**

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பத்தரமுல்லவில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டின் பொருளாதாரத்துடன் விளையாடுவதற்கு இனி எவருக்கும் இடமளிக்கக்கூடாது. மோசடியாளர்களையும் பொறுப்புக்களிலிருந்து தப்பிச் செல்லும் அரசியல்வாதிகளையும் நாடாளுமன்றத்துக்கு அனுப்பாதிருப்பது மக்களின் பொறுப்பாகும்.

அரசியலில் அனுபவம் அவசியம். அனுபவத்தால் மாத்திரமே பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லமுடியும். இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு பாடுபட்டோம். மாற்றம் என்பது முகத்தை மாற்றுவது அல்ல. இந்தப் பொருளாதார, அரசியல் முறைமைகளை நாம் மறுசீரமைக்க வேண்டும்.

2048 வரையிலான எதிர்காலம் குறித்து சிந்திக்கவேண்டும். நாட்டின் எதிர்காலத்தையும் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு நாம் முன்னேற வேண்டும்.

மீண்டும் 2022 பழைய நிலைக்குச் செல்வதா? அல்லது நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி முன்னேறுவதா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்- என்றார். (ச)

# வன்முறைச் சூழலை தவிர்க்கவேண்டும்!

## ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தலுக்கான அமைதியான சூழலே நாட்டில் உள்ளது. வெவ்வேறு நாடுகளில் இடம்பெற்ற வன்முறைச் சூழல்களை எடுத்துக்கூறி இலங்கையில் தற்போதுள்ள அமைதியான சூழலை குழப்பும் நோக்கில் யாரும் செயற்படக்கூடாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

2024 ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்காக சுமார் 70 ஆயிரம் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தை நேரடியாக தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாவிடினும் வழமை போல நாடளாவிய ரீதியில் இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அமைதியானதும் சுதந்திரமானதுமான வாக்களிப்புக்கான சூழல் நாட்டில் உள்ளது. வெவ்வேறு நாடுகளில் இடம்பெற்ற வன்முறைச்சூழல்களை எடுத்துக் காட்டி இலங்கையில் தற்போதுள்ள அமைதியான சூழலை குழப்பும் நோக்கில் சிலர் கருத்துகளை கூறிவருகின்றனர். இது தவிர்க்கப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)

# அரசவளம் துஷ்பிரயோகம் 750 முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 16

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்காகப் பொதுச்சொத்துகளை தவறாகப் பயன்படுத்தியதாக 750 க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் தெரிவித்துள்ளது.

விளையாட்டு மைதானங்கள், பாடசாலைகள், அரச கட்டடங்கள் என்பன உரிய கட்டணம் செலுத்தப்படாமல் பயன்படுத்தப்பட்டுள்ளன, பதாகைகள், கட் அவுட்டுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இது தேர்தல் விதிமீறல்.

அரச அதிகாரிகள் நேரடியாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக 117 முறைப்பாடுகளும் அரச வாகனங்களை தேர்தல் பிரசாரத்துக்காக பயன்படுத்தியதாக 32 முறைப்பாடுகளும் , பதவி உயர்வு, பதவி இறக்கம் என்பன தொடர்பாக 7 முறைப்பாடுகளும் பிரசார அலுவலக வன்முறைகள் தொடர்பாக 30 முறைப்பாடுகளும் அரச சொத்துகளை தவறாகப் பயன்படுத்தியதாக 26 முறைப்பாடுகளும் பதவிகளை துஷ்பிரயோகம் செய்ததாக 14 முறைப்பாடுகளும் அரச அபிவிருத்தித் திட்டங்களைத் தவறாக பயன்படுத்தியதாக 26 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாகவும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் தெரிவித்துள்ளது. (ச-6)

# ஒழுக்கமற்றோர் விரட்டப்படுவர்

## அநுர தெரிவிப்பு



கொழும்பு, செப். 16

தற்போதைய நாடாளுமன்றம் ஒழுக்கமற்றவர்களின் கூடாரமாக மாறியுள்ளது. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் வென்றதும் ஒன்றரை மாதத்துக்குள் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் - என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு, தெற்கு என எல்லா இடங்களிலும் ஒன்றைத்தான் குறிப்பிடுகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதும் கூடியவிரைவிலேயே நாடாளுமன்றம் கலைக்கப்படும்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் தரக்குறைவாகக் கதைக்கின்றனர், கப்பம் வாங்கிவிட்டு சிறைக்கு சென்றவர்கள், கொலை செய்தவர்கள் என ஒழுக்கமற்றவர்களின் கூடாரமாக நாடாளுமன்றம் மாறியுள்ளது. இப்படியொரு நாடாளுமன்றம் தேவையில்லை. எனவே, ஒன்றரை மாதத்துக்குள் நாம் நாடாளுமன்ற தேர்தலை நடத்துவோம் என்றும் குறிப்பிட்டார். (ச-44)



# கண்காணிப்பாளர் 71 பேர் வருகை

கொழும்பு, செப். 16

சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளைச் சேர்ந்த 71 பிரதிநிதிகள் இலங்கை வருகை தந்துள்ளனர்.

அவர்களில் 43 பேர் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் , 22 பேர் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்தவர்கள். தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பிலிருந்து 6 பேரும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வரும் நாள்களில், மேலும் 34 ஐரோப்பிய ஒன்றிய பார்வையாளர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

# தேர்தலை முன்னிட்டு அவசரகால பாதுகாப்பு

கொழும்பு, செப். 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாட்டில் ஏற்படக்கூடிய அவசர நிலைமையை எதிர்கொள்வதற்காக 'அவசரகாலத் திட்டத்தை' தயாரிப்பதற்கு பாதுகாப்புத் தலைவர்களுக்கு ஜனாதிபதி அதிகாரம் வழங்கியுள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் கீழ் முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர்கள் தலைமையில் அவசரகாலப் பாதுகாப்புத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. (ச)

# பரப்புரைகள் இறுதிக்கட்டம் கட்சிகள் பிரமாண்ட ஏற்பாடு

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தலுக்குரிய பிரசார நடவடிக்கைகள் யாவும் நாளை மறுதினம் நள்ளிரவுடன் ஓய்வுபெறவுள்ள நிலையில் கடைசிப் பிரசாரக் கூட்டத்தை பிரமாண்டமாகவும், வெற்றிகரமாகவும் நடத்தி முடிப்பதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தயாராகிவருகின்றன.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கூட்டணிகளின் தலைவர்கள் எல்லாம் கடைசிக் கூட்டத்தில் ஒன்றாக பங்கேற்பதால் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாட்டுக்குரிய வியூகங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் கடைசித் தேர்தல் பிரசாரக் கூட்டம் கொழும்பு மாநகர எல்லையை மையப்படுத்தியதாக அமையவுள்ளது. அதேவேளை ஜனாதிபதித் தேர்தல் நிலைவரம் தொடர்பில் வெளிநாட்டு உளவு அமைப்புகளும் களத்தில் இறங்கி தீவிரமாக செயற்பட்டுவருதாகத் தகவல் வெளியாகியுள்ளது. நாடளாவிய ரீதியில் 13 ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்களில் செப் ரெம்பர் 21 ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. மாலை 6 மணி முதல் வாக்கெண்ணும் பணி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செழிப்பான தேசத்துக்கு தரமான சுகாதார சேவை

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



**கொழும்பு, செப். 16**

**ஒரு தலைமுறையின் சுகாதாரம் அந்த நாட்டு உற்பத்தித் திறனில் தாக்கம் செலுத்துகின்றது. அந்தவகையில் அரசின் சுகாதாரக் கொள்கையின் ஊடாக அனைத்து தரத்திலும் சிறந்த சேவையை வழங்குவோம் - இவ்வாறு கொழும்பு பத்தரமுல்லவில் இடம்பெற்ற நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சுகாதாரத் துறையில் காணப்படுகின்ற அனைத்து தரத்திலான சேவைகளிலும் ஈடுபட்டுள்ள மக்களின் அபிமானம் மற்றும் ஆத்ம திருப்தியை கொண்ட சேவைக்கான வசதிகளோடு திருப்திகரமான அரச சேவையை முன்னெடுப்பதற்கு மேற்கொள்ள முடியுமான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுப்போம்.

அதேபோன்று தேசிய போஷாக்குக் கொள்கைத் திட்டத்தின் ஊடாக குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் மந்தபோஷனை நிலைமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். தேசிய போஷனைக் கொள்கைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி தாய் - சேய் போஷனை மட்டத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுப்போம். ஒரு தலைமுறையின் சுகாதாரம் அந்த நாட்டு உற்பத்தித் திறனில் தாக்கம் செலுத்துகின்றது. அதற்காக சுகாதாரத் துறையை பலப்படுத்த வேண்டும் - என்றார். (ச)

# போதைப்பொருள் விற்பனை பல்கலை மாணவன் கைது



கொழும்பு, செப். 16

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பல்கலை மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளதாக கிரிபத்கொடை பொலிஸ் குற்றப்புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்தனர்.

களனிப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 26 வயதுடைய மாணவனே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 30 போதை மாத்திரைகள் மற்றும் இலத்திரனியல் தராசு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை கிரிபத்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# குற்றச்சொத்துகள்; தண்டனை பாயும்

கொழும்பு, செப். 16

குற்றத்தின் மூலம் பெறப்பட்ட சொத்துகளை வைத்திருப்பவர்கள் அல்லது அதனுடன் ஏதேனும் பரிவர்த்தனைகளில் ஈடுபடுபவர்கள், சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களை செய்தவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டால், 10 மில்லியன் ரூபாய் அபராதம் மற்றும் 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும். நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் அமைச்சகத்தால் இந்த வாரம் வெளியிடப்பட்ட 'குற்றத்தின் வருமானம்' என்ற புதிய யோசனையில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த யோசனையின் மூலம், குற்றத்தின் வருமானத்தை மீட்டெடுப்பதற்கும், சர்வதேச ஒத்துழைப்பு மூலம், விசாரணைகளை நடத்தவும் முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# தேர்தல் பந்தயங்கள் இம்முறை அதிகரிப்பு

கொழும்பு, செப். 16

இந்த ஜனாதிபதித் தேர்தலின்போது முன்னெப்போதும் இல்லாத வகையில் பந்தயம் கட்டுவது அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தேர்தல் தீர்மானமிக்கதாகக் கருதப்படுவதே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகள், வாகனங்கள், பணம் உள்ளிட்ட பல கோடி மதிப்பிலான சொத்துகளை சிலர் தேர்தல் பந்தயமாக வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவில் அதிகமாக வர்த்தகர்கள் இருப்பதாகவும், அவர்களில் பெரும்பாலானவர்கள் ரத்தின வியாபாரிகள் மற்றும் தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பந்தயம் கட்டியவர்கள் வழக்கறிஞர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ச)

# உடல் ரீதியான தண்டனைக்கு தடை

கொழும்பு, செப். 16

குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்கமைய நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் பரிந்துரைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எந்தவொரு முறையிலும் உடல் ரீதியிலான தண்டனையை தடை செய்யும் வகையில், தண்டனைச் சட்டம் திருத்தப்பட்டு, அதற்குரிய சட்டத்தை உருவாக்குவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (ச)

# புதிய ஜனாதிபதியை சந்திக்க ஐ.எம்.எப். குழுவினர் வருகை

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்களுக்குப் பின்னர் புதிய பணியாளர் மட்ட உடன்படிக்கைக்கான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும், தற்போதைய வேலைத்திட்டத்தை மீளாய்வு செய்வதற்கும் சர்வதேச நாணயநிதியத்தின் குழுவொன்று இலங்கைக்கு பயணிக்கவுள்ளது. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியைச் சந்தித்து, தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் நிர்வாகம் முன்மொழிய விரும்பும் மாற்றங்கள் குறித்து விவாதிப்பார்கள் என்று நிதி அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)




## 'கலவரமொண்டு வரப்போகுது'

**இதுதான் இப்ப சிங்கள ஏரியாக்களில பரபரப்பா பேசப்படுற ஒரு வதந்தி. எலக்சனை விடவும் இந்தக் கலவரச் செய்திதான் அங்க நெருப்பு மாதிரிப் பரவிக்கொண்டிருக்காம். கலவரம் வரப்போகுதெண்ட பயத்தில சனங்கள் ,சாமான் சக்கட்டு எல்லாம் வாங்கி வீடுகளில சேர்த்து வைக்கவும் தொடங்கிட்டினமாம். உந்தக் கலவர வதந்தியை ஆர் உருவாக்கினதெண்டு தெரியேலை. ஆனால் காஸ்சிலிண்டர்காரரும், திசைகாட்டிக்காரரும், மொட்டுக்காரரும் உந்த வதந்தியை இன்னும் பரப்பினபடி இருக்கினம்.**

**இந்தமுறை எலக்சனில எந்தவொரு வேட்பாளரும் அம்பது சதவீத வாக்குகளை எடுக்கேலாத நிலைமைதான் வரும். அப்பிடியொரு நிலைமை வந்தால் கட்டாயம் ரண்டாம் கட்ட வாக்குகளை எண்ண வேணும். அது லேசுப்பட்ட வேலையில்லை. எப்பிடியும் அதுக்கு இன்னுமொரு நாள் பிடிக்கும். அதால ஆர் அடுத்த ஜனாதிபதி எண்டு எலக்சன் நடந்து ரண்டு நாளைக்குப் பிறகுதான் அறிவிப்பு வரும் போல கிடக்கு. இந்த ரண்டு நாளுக்குள்ள அரும்பொட்டில தோக்கிற ஆக்கள் தான் 'வாக்கு எண்ணேக்க மோசடி செய்திட்டினம்' எண்டு சொல்லிபெரியகலவரத்துக்கு பிளான் பண்ணுகினமாம். அப்பிடி பிளான் பண்ணுற தரப்பு எதெண்டது தான் இப்ப பெரும் கேள்வி. 'இந்தமுறை எப்பிடியும் முதல் ரண்டு இடத்திலையும் திசைகாட்டியும், ரெலிபோனும் தான் வரப்போகினம். மூண்டாம் இடம்தான் சிலிண்டருக்கு. அதால எப்பிடியும் தான் இனிமேல் ஜனாதிபதிய வரமாட்டன் எண்டது தெரிஞ்சால் சிலிண்டர்காரர் தான் கலவரத்தை ஏற்படுத்தி, அதைக்கட்டுப்படுத்துறதுக்காக அவசர காலநிலையைக் கொண்டந்து தொடர்ந்தும் ஜனாதிபதியா இருக்க நினைக்கிறார்' எண்டு திசைகாட்டிக்காரர் சொல்லுகினம்.**

**ஆனால் சிலிண்டர்காரரும் மொட்டுக்காரரும் வேற மாதிரிச் சொல்லுகினம். 'திசைகாட்டிக்காரரின்ர கூட்டங்களுக்கு முந்தியும் சனங்கள் போறதுதான். இந்தமுறையும் கூட்டத்தைப் பாத்திட்டு தங்களுக்குத்தான் வெற்றி எண்டு நினைக்கினம். ஆனால் வாக்குப் போடுறவை வேறமாதிரித்தான் போடுவினம். அப்பிடித்தோத்திட்டால், நாங்கள் வாக்கில மோசடி செய்திட்டா சொல்லி நாடு முழுக்க கலவரத்தை உண்டாக்கி, ஆட்சியைப் பிடிக்க திசைகாட்டிக்காரர் திட்டம் போட்டு வைச்சிருக்கினம்' எண்டது அவையின்ர குற்றச்சாட்டா இருக்குது.**

**இப்பிடி ரண்டு தரப்பும் பரப்பிற வதந்தியளால சனங்கள்தான் பதகளிப்பட்டு திரியுதுகள். எலக்சன் முடிஞ்சாலும் சிக்கல்தான் போல. ஆனால் உந்த விசயத்தை வெறும் வதந்தியெண்டும் கடந்து போக ஏலாது. இலங்கையில எதுவும் நடக்கலாம் கண்டியளோ.**



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்ப்பாணம், அராலி கிழக்கு மெஞ்ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் இறுதி நாளாகிய எதிர்வரும் 22 ஆம் திகதி 10 வலம்புரிச் சங்கு, 98 இடம்புரிச் சங்கு வைத்து 108 சங்காபிஷேக பூஜை இடம்பெற்று தொடர்ந்து, புதிய பாடல் வெளியீடும், கலைஞர்கள் கௌரவிப்பும் நடைபெறும். (ச)

# அறநெறி ஆசிரியர்களுக்கு 7,500 வருடாந்தக் கொடுப்பனவு

கொழும்பு, செப். 16

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் 7,500 ரூபா வருடாந்த கொடுப்பனவொன்றை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையை புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் முன்வைத்துள்ளார். இதன்படி எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு முதல் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு, ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 5000 ரூபாவும், சீருடை கொடுப்பனவாக 2,500 ரூபாவும் சேர்த்து வருடாந்தக் கொடுப்பனவாக 7,500 ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரிக்கும். சமாளித்துவிட முடியும்.

**மிதுனம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வியாபாரம் எப்போதும்போல் நடைபெறும். விநாயகரை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.இலாபம் கிடைப்பது மகிழ்ச்சி தரும். தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்று.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண்செலவுகள் ஏற்படும். முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடமுடியும். உறவுகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். செலவு செய்ய நேரிடும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையாக நடந்து கொள்ள முயற்சி செய்யவும். சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம்.



# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.16

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச எழுத்தறிவு தின கருத்தரங்கு கரம்பைக் குறிச்சி பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது

கருத்தரங்கில் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு அலுவலர் எம். சுரேஸ்வரன் வளவாளராகக் கலந்து கொண்டார். (ச-45-9)

# கொக்கட்டிச்சோலைக்கு திருத்தல பாதயாத்திரை

கொழும்பு, செப். 16

வரலாற்றுச் சிறப்பு மிக்க கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேரோட்டத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் வளர இறையருள் வேண்டி

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து புனித திருத்தலத் தரிசன பாதயாத்திரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் இந்தப் பாதயாத்திரை இடம்பெறவுள்ளது.

சிவலிங்கம் தாங்கிய ஊர்தி சகிதம் பிரசித்திபெற்ற ஆலயங்களில் நாமபஜனை பூசை வழிபாடுகளுடன் வவுனியா, திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு சென்று பல ஆலயங்களைத் தரிசித்து மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தங்கி எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாதயாத்திரையாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் சென்றடையும்.

குறித்த தரிசன யாத்திரையில் இணைந்து கொள்ள விரும்பும் அடியார்கள் 16 ஆம் திகதிக்கு முன்னர் 0779236552 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவை மேற்கொள்ளுமாறு இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

# துர்க்காதேவி தேரில் காவடிகள் படையெடுப்பு

யாழ்ப்பாணம், செப். 16

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயக் குரோதி வருட மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

தேர்த் திருவிழாவை முன்னிட்டுப் பல நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் காலை முதல் பல வகையான காவடிகள் எடுத்து நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றினர். (ச-66)





கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான முகமாலை புனித ஆரோக்கிய மாதா ஆலய நவநாள் வழிபாட்டின் திருச்சொரூப பவனி நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பளை பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மறைமாவட்ட பேராயர் [illegible] ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டார். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வாக்களிப்பு முறையும் மக்களின் புரிதலும்

தேர்தல் காலத்தில் தான் நாட்டில் உள்ள அரசியல் வாதிகளுக்கு மக்களைப் பற்றிய திடீர் ஞாபகம் வரும். அவர்களின் வாக்குகள் இருந்தால்த்தான் தாம் அதிகாரத்தை ருசிக்க முடியுமென்ற உண்மை அவர்களுக்கு அப்போதுதான் உறைக்கும். ஆனால் மக்களை அவர்களே மறந்திருப்பார்கள். அதனால் மக்களுக்கு தம்மைப்பற்றிய நினைவுகளை புகுத்துவதற்காக கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டி, துண்டுப்பிரசுங்கள், விளம்பரங்கள், கொடிகள், பதாகைகள், கூட்டங்கள் என்று பிரசாரங்களை நடத்துவார்கள். இந்தப் பிரசாரங்களில் தங்களுடைய சின்னத்துக்கு வாக்களிக்கச் சொல்லித்தான் அவர்களின் பரப்புரைகள் அமையுமே தவிர, எல்லோரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டுமென்பதையோ, வாக்களிக்கும் முறைமை பற்றியோ அவர்கள் மூச்சும் விடுவதில்லை. இதனால் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் பொதுமக்கள், எப்படி வாக்களிப்பது என்று குழம்புவதால் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் அதிகமாகப் பதிவாவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டாகின்றன. அத்துடன் வாக்களிப்பது என்பது தேவையற்ற ஒரு செயல் என சிலர் நினைத்து, வாக்களிக்கச் செல்லாமல் விடுவதால் தவறானவர்களின் கைகளுக்கு அதிகாரம் செல்லும் அபாயமும் உண்டு.

எப்படி வாக்களிக்கவேண்டும் என்ற புரிதலையும், கட்டாயம் எல்லோரும் வாக்களிக்கவேண்டும் என்ற விழிப்புணர்வையும் மக்களுக்கு ஏற்படுத்துவதனூடாக, அதிகார மாற்றத்தை சரியானவர்களிடம் கையளிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் அதனை அரசியல் கட்சிகள் செய்வதேயில்லை. உண்மையில் இப்படியான விழிப்புணர்வையும், தெளிவூட்டலையும் செய்ய வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கே அதிகமுண்டு. , வாக்காளர்களைப் பதிவு செய்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தேர்தல் தினத்தை அறிவிப்பது, வேட்புமனுக்கோருவது, சின்னங்களை வழங்குவது, கட்சிகளைப் பதிவுசெய்தல், வாக்குச்சீட்டு அச்சிடல், தேர்தலைநடத்துதல் என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு பல பணிகள் இருந்தாலும், அவற்றுள் எல்லாம் தலையாய பணியாக மக்களுக்கு வாக்களிப்புப் பற்றிய விழிப்புணர்வுப் பணியை தேர்தல் ஆணைக்குழு மனதில் இருத்திச் செயற்படவேண்டும். ஆனால் நடைமுறை அதற்கு எதிர்மாறாகவே இருக்கின்றது. இம்முறை நடக்க இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் மற்றைய எல்லாப் பணிகளிலும் அக்கறை எடுத்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, வாக்களிப்பு முறை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகளை ஆங்காங்கே நடத்துவதாக செய்திகள் வருகின்றன. ஆனால் அந்த நடவடிக்கைகள் அவை வெறும் செய்திகளாக மட்டும் அறிக்கையிடப்படுகின்றனவே தவிர மக்களிடம் வாக்களிப்பு முறை தொடர்பான விளக்கம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இன்னமும் புள்ளடியிடுவதா, எத்தனை இலக்கம் போடலாம், புள்ளடியும் இலக்கமும் போடலாமா? என்ற குழப்பங்கள் அவர்களிடம் இன்னும் நீடிக்கின்றன.

வீட்டுக்கு வீடு சென்று அரசியல்வாதிகள் வாக்குக் கேட்பதைப் போன்று, வாக்களிப்பு முறை பற்றிய விளக்கமும் வீட்டுக்கு வீடு சென்று செய்யவேண்டிய ஒன்று. அதைவிடுத்து அங்கொன்றும் இங்கொன்றுமாக அடையாளத்துக்காக மூடிய மண்டபங்களுக்குள் செய்யப்படும் விழிப்புணர்வு நிகழ்வுகள் அடித்தட்டு மக்களிடம் சேரப் போவதில்லை. மக்களிடம் இறங்கி வேலை செய்ய தேர்தல்கள் ஆணைக்குழு பழகிக் கொள்ளவேண்டும். தேர்தலின் உண்மையான நாயகர்கள் வாக்காளர்களே. அவர்களுக்கு வாக்களிக்கும் முறை பற்றிய தெளிவில்லாமல் எப்படி சரியான வகையில் வாக்களிக்க முடியும்? தேர்தல் காலத்தில் தான் இந்த விழிப்புணர்வைச் செய்யவேண்டுமென்றில்லை. தேர்தலற்ற காலத்தில் கூட நாடாளுமன்றத்தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல், மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்ற நான்கு வகையான தேர்தல்களிலும் வாக்களிப்பு முறையில் உள்ள வித்தியாசம் என்ன, ஒவ்வொரு முறைக்குமான வாக்களிப்பு நடைமுறை என்ன ஒரு மாதிரித் தேர்தலை கிராம மட்டங்களில் நடத்தினால், மக்களிடம் வாக்களிப்பு முறை பற்றிய சரியான புரிதல் உண்டாகும். இனியாவது இதனை தேர்தல்கள் ஆணைக்குழு கருத்தில்கொள்ளுமா?




# உள்நாட்டு உற்பத்திகள் மிக வேகமாக வளர்ச்சி

## புள்ளிவிவரவியல் திணைக்களம் தகவல்

**கொழும்பு, செப். 16**

**இந்த வருடத்தின் ஏப்ரல் - ஜூன் வரையான 3 மாதங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.7 சதவீதமாக அதிகரித்திருப்பதன் மூலம், இரண்டாம் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் முன்னெதிர்வு கூறப்பட்டதை விடவும் மிகவேகமான வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கிறது.**

புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகளின்படி இந்த விடயம் தெரியவந்துள்ளது. இவ்வருடம் ஜனவரி, மார்ச் மாதம் வரையான முதலாம் காலாண்டில் 5.3 சதவீதமாகப் பதிவான மொத்த உள்நாட்டு உற்பத்தி, இரண்டாம் காலாண்டில் 4.7 சதவீதமாகப் பதிவாகியிருக்கின்றது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் பதிவான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இது கணிசமானளவு அதிகரிப்பாகும். அதேபோன்று இந்தக் காலப்பகுதியில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகள் முறையே 1.7 சதவீதம், 10.9 சதவீதம் மற்றும் 2.5 சதவீதமாக உயர்வடைந்திருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தேர்தலுக்கு ‘பார்கள்’ பூட்டு

கொழும்பு, செப். 16

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் இரண்டு நாள்களுக்கு மூடப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி, எதிர்வரும் 21ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என மதுவரித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# ஏற்றுமதி வருமானம் 7 மாதங்களில் உயர்வு

கொழும்பு, செப். 16

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 5.6 சதவீதமும், இறக்குமதி செலவு 9.1 சதவீதமும் அதிகரித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் எரிபொருளுக்காக அதிகளவில் இறக்குமதிச் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்த 7 மாதங்களில் எரிபொருள் இறக்குமதிக்காக 2 ஆயிரத்து 548 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# நிறமூட்டப்பட்ட தக்காளி ‘சோஸ்’

## விற்றவருக்கு சிறை

கொழும்பு, செப். 16

உணவுப் பாதுகாப்பு விதிகளை மீறி மனித சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் செயற்கை நிறமூட்டி கலந்து தயாரிக்கப்பட்ட தக்காளிப்பழச்சாறு கலவையை விநியோகித்த உரிமையாளருக்கு 6 மாதகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி சுகாதாரப் பிரிவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச)

# இலஞ்சம், ஊழல் 2,142 முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 16

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் 2,142 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன்படி, இலஞ்சக் குற்றச்சாட்டு தொடர்பில் 158 முறைப்பாடுகளும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் 379 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

அத்துடன், சட்டவிரோதமாக சொத்துகளை சேர்த்தமை தொடர்பில் 79 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தக் காலப்பகுதியில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் 26 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 8 பேர் பொலிஸ் அதிகாரிகளாவர். (ச)

## நாளை

17.09.2024

செவ்வாய்க்கிழமை - ஆவணி - 01

சுபநேரம் : 10.33 - 12.03


ராகுகாலம் : 03.03 - 04.33

## நாளொரு நல்வார்த்தை

**எரிகின்ற நெருப்பை நீரினால் அணைப்பது போல மனதில் எழுகின்ற கோபத்தைப் புத்தியினால் அடக்குபவன் மகாத்மா.**


- ஸ்ரீராமகிருஷ்ணர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ‘கோஸ்ரிங்’ பயிற்சிவகுப்பு

யாழ்ப்பாணம், செப்.16
தென்மராட்சிப் பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான ‘கோஸ்ரிங்’ தொடர்பான பயிற்சி வகுப்பு சாவகச்சேரி நகர் கிராம பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பயிற்சிநெறியில் பிரதேசத்தைச் சேர்ந்த 15 முயற்சியாளர்கள் பங்குபற்றினர். (ச-45-9)





மிருசுவில், உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்களுக்கான செயலமர்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. செயலமர்வில் விரிவுரையாளர் ஆர். றமணரூபன் வளவாளராகக் கலந்து கொண்டார். (ச-9)




## 5 வயதுச் சிறுமி உலகசாதனை

மட்டக்களப்பு, செப். 16
மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த 5 வயதுச் சிறுமியான காவ்யஶ்ரீ, அதிவிரைவாக கணக்குகளை சரி செய்ததன் மூலம் சோழன் உலக சாதனை படைத்துள்ளார். அவர் தனக்கு வழங்கப்பட்டிருந்த 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளுக்கான சரியான பதிலை 6 நிமிடங்கள் 50 வினாடிகளில் எழுதி சோழன் உலக சாதனை படைத்துள்ளார். அவரை கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள கிரீன் கார்டன் ஹோட்டலில் வைத்து சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் அண்மையில் நடைபெற்றது. (ச)



தியாக தீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் நல்லூரில் உள்ள நினைவுத்தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். (ச-100)



## வீடு கையளிப்பு!

யாழ்ப்பாணம் , செப். 16
யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையின் சேவையில் கனடாவில் வசிக்கும் செந்தூரன் தம்பதிகளின் 25 ஆவது திருமண நாளை முன்னிட்டு அவர்களது நிதி அனுசரணையில் வட்டுக்கோட்டையைச்சேர்ந்த நிசோபனா குடும்பத்தினருக்கு வீடுகட்டி கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-22,63)



## முருகானந்தாக் கல்லூரிக்கு சுற்றுமதில்

கிளிநொச்சி, செப். 16
கிளிநொச்சி முருகானந்தா கல்லூரிக்கு சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது. முருகானந்தா கல்லூரியின் பழைய மாணவர்களால் பிரித்தானிய முரசுமோட்டை ஒன்றியம் ஊடாக 5.5 மில்லியன் நிதிப் பங்களிப்பில் இந்தச் சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுமதில் கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி முதல்வர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்றது. (ச-13)



## அராலியில் ஐ. ம. ச.பரப்புரை

யாழ்ப்பாணம், செப்.16
ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஐ. ம. சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் நந்தகுமார் தலைமையில் அராலியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பரப்புரைக் கூட்டத்தில், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கலந்து கொண்டார். (ச-25,27)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாழில் பூர்த்தி

## பதில் மாவட்டச் செயலர் அறிவிப்பு



**கொழும்பு, செப். 16**

**எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்களிப்பு சிறப்பாக நிறைவடைந்துள்ளதாக வும், யாழ்.மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பெருமளவில் பூர்த்தியடைந்துள்ளதாகவும் யாழ்.மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக குழுக் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. குழுக்களின் கடமைகளுக்காக இணைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் அனைவரும் தேர்தல் பணியாளர்கள் என்ற ரீதியில் பாகுபாடின்றி ஒருமித்து ஒருங்கிணைந்து சிறப்பாகச் செயற்பட வேண்டும். வாக்கெண்ணும் நிலையமாகச் செயற்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் குழுக்களின் செயற்பாட்டில் ஈடுபடும் அலுவலர்கள் தங்களது சிறப்பான தொடர்பாடல் திறன் மூலம் வினைத்திறனாகச் செயற்பட்டுத் தேர்தல் கடைமைகளுக்காக இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் நலன்களைப் பேணிச் சிறப்பான செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறும் மாவட்டச் செயலர் வலியுறுத்தினார். (ச-66)

# முறைப்பாடுகள் 4,031

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 4,031 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகதேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கடந்த 24 மணித்தியாலங்களில் தேர்தல் ஒழுங்குமுறை ஆணைக்குழுவிற்கு மொத்தம் 203 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3,916 முறைப்பாடு களும், வன்முறைச் செயல்கள் தொடர்பான 29 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ச)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது மருமகனான

அருணாயோகநேசன் டினோராஜ்

அவர்கள்



29.08.2024 அன்று
யாழ். மாவட்ட நீதிபதி
"S.SHATHEESHTHARAN"
முன்னிலையில் இலங்கைதீவு
முழுவதுக்குமான சமாதான
நீதிவானக
(ISLAND JUSTICE OF PEACE)
யாழ். நீதிமன்றில் சத்தியபிரமாணம்
செய்துகொண்டார்.
இவரது சேவை ம்க்களுக்கு
தொடர்ந்து கிடைக்க வேண்டும்
என்று இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர் :- மாமா (உதயராசா),
மாமி (லலிதா)
மச்சான்மார் (சரவணபவன், சடகோபன்)
மச்சாள்மார்(ஜோதிகா, தர்ஷனா)
(அறிவழகன், கருணிகா)

(ст. 43233) (N-1)

# வடக்கு - கிழக்கு மக்களின் வாக்குகள் ரணிலுக்கே!

*ரவி கருணாநாயக்க தெரிவிப்பு*

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்குகள நிலைவரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமாக உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரான முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அவருக்காக தீவிர பிரசாரங்களை முன்னெடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது வடக்கு, கிழக்குக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள ரவி கருணாநாயக்க, இவ்விரு மாகாணங்களிலும் ஜனாதிபதி ரணிலுக்கான வெற்றிவாய்ப்பு அதிகம் உள்ளது என சுட்டிக் காட்டி, அதற்குரிய புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, மிதக்கும் வாக்குகளை பெறுவதற்குரிய வியூகங்களே தற்போது தேவைப்படுகின்றன எனவும் ஜனாதிபதிக்கு பிரசார நடவடிக்கைக்கு பொறுப்பானவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-44)

# வேட்பாளர் பற்றி விமர்சிப்பு கடுமையான சட்டம் பாயும்!

சமூக வலைத்தளங்களில் வேட்பாளர்கள் தொடர்பில் கருத்து வெளியிடுபவர்கள் தொடர்பில் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற செயல்களைச் செய்வது மக்களின் தனியுரிமை அல்லது அடையாளத்தில் சில தாக்கங்களையும் சேதத்தையும் ஏற்படுத்துகிறது.

இது ஒருவகையான தேவையற்ற செல்வாக்கு. இது தொடர்பில் எவரேனும் முறைப்பாடு செய்தால், உரிய நடவடிக்கை எடுக்க முடியும். ஏற்கனவே இவ்வாறான செயல்களைச் செய்த பலருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ச)


மணப்பெண் தேவை

1. கோண்டாவில்-கல்வியன்காடு. இந்து கௌரவகுலம் (v) 1990. ரேவதி. Phd in Engineering. Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34935
2. தெல்லிப்பளை. இந்து கௌரவகுலம் (V). 1988. உத்தரம். Bsc Engineering. USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை 34337
3. காரைநகர் இந்து கௌரவகுலம் (V) 1989 சித்திரை Graduate. UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. பருத்தித்துறை இந்து கௌரவ குலம் (v). 1990 அவிட்டம் Bsc (Hons). கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை
5. பருத்தித்துறை இந்து கௌரவகுலம் 1987 உத்தரம். BSc, ACMA, CGMA Senior Financial Analyst Canada மாப்பிள்ளைக்கு பெண்தேவை
6. கரப்பன்-Jaffna Town இந்து கௌரவகுலம் (v) 1988 ரோகிணி BSc Engineer கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை 28033
7. உரும்பிராய்-இணுவில் இந்து கௌரவகுலம் (v) 1991 பூரம் Network Engineer. Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை 29309
8. கந்தர்மடம் இந்து கௌரவகுலம் (v). 1989 உத்திராடம். MSc Canada மாப்பிள்ளைக்கு பெண்தேவை
9. கரவெட்டி இந்து கௌரவகுலம் (v). 1986 திருவோணம் BA (Hons). CIMA Fully Qualified. UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை

S.Sharma J.P. 077 539 3728
www.thaalee.com whatsap: 077 803 8193

வெல்க தமிழ்
சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!





எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்.
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.

தமிழ்ப் பொது வேட்பாளர்
பா.அரியநேத்திரன்

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடியாளர் தப்பிக்கவே முடியாது

## அநுர தெரிவிப்பு

**கொழும்பு, செப். 16**


**ஊழல்,மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாட்டைவிட்டுத் தப்பியோடினால்கூட தேர்தல் முடிந்த பின்னர் அவர்களை நாட்டுக்கு கொண்டுவருவதற்குரிய ஏற்பாடுகள் உள்ளன என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு சுமார் 80 வரையான அரசியல்வாதிகள் விசா பெற்றுள்ளனர் என வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"தப்பியோட முற்படுபவர்கள் போகட்டும். அவர்கள் நிச்சயம் மீண்டும் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவார்கள். அர்ஜுன மகேந்திரனும் கொண்டுவரப்படுவார். அதேவேளை தாஜுதீன் படுகொலை, லசந்த விக்கிரமதுங்க படுகொலை, 11 மாணவர்கள் கடத்தி படுகொலை செய்யப்பட்ட படுகொலை தொடர்பில் நிச்சயம் விசாரணை தொடரும்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆரம்பத்தில் முதல் இறுதிவரை ஆராயப்படும். நான் சிறிசேன அல்ல, எனவே, முறையாக விசாரணை நடத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது." - என்றார். (ச-44)

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 02 . 1949 — மறைவு 15 . 09 . 2024

## அமரர் கதிர்காமு செல்வரத்தினம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு சிவன்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வம் என்று அழைக்கப்படும் கதிர்காமு செல்வரத்தினம் அவர்கள் 15.09.2024 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டடார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு-அன்னம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதி-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் செந்தூரனின் பாசமிகு தந்தையும் நளினாவின் அன்பு மாமனாரும் அனந்தன், செதுஸ்னாவின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான குணமணி, ராசம்மா, பரமேஸ்வரி, இராசதேவி, இராசலிங்கம் மற்றும் ரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மற்றும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு, பசுபதி, பொன்னுத்துரை, முருகையா, தங்கராசா மற்றும் சின்னமணி, காலஞ்சென்றவர்களான இலட்சுமி, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.09.2024 ம் திகதி திங்கட்கிழமை மதியம் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் சின்னத்தூ. இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**மட்டுவில் தெற்கு,**
**சிவன்கோயிலடி,**
**சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**மகன் செந்தூரன்**
**077 404 6598**

(CR 43236) V-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 11 . 1946 — மறைவு 11 . 09 . 2024

## தினகரன் இராஜேஸ்வரி

யாழ். கொக்குவில் பிரம்படி வீதியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை சிவன் கோவில் வடக்கு வீதியை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Colombes ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தினகரன் இராஜேஸ்வரி கடந்த 11.09.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமநாதன் - இராசமணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற தினகரன் அவர்களின் அன்பு மனைவியும், குமுதினி, ரஜனி, துஷிகரன், மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற முருகதாஸ், ராஜ்குமார், சோபி, ரங்கா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தினேஷ், நிவேதா, ஆரோன், அஜீனா, ரிஷான் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, மங்களேஸ்வரி, சண்முகநாதன், திருச்செல்வம், சத்தியநாதன் மற்றும் பரமேஸ்வரி, சர்வேஸ்வரி, சற்குணநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற விஸ்வலிங்கம், பொன்னம்பலம், றஜீனா, புலேந்திரன், பாமதி, தயாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான திலகவதி, கலாவதி மற்றும் ரவீந்திரன், ரூபாவதி, கருணாவதி, நந்தாவதி, சுவேந்திரன், தயாவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான அமரசிங்கம், கிருஸ்ணபாலா மற்றும் நகுலேஸ்வரி, குலநாயகம், பூலோகசிங்கம், பஞ்சலிங்கம், இராஜஸ்ரீ ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (18.09.2024) புதன்கிழமை பிரான்சில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs 56221) (N - 1)

# மரண அறிவித்தல்



பிறப்பு 26 . 01 . 1943 — இறப்பு 14 . 09 . 2024

## ஸ்ரீமதி துரைரத்தினம்

சாவகச்சேரி கோவில்குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீமதி துரைரத்தினம் நேற்று முன்தினம் (14.09.2024) சனிக்கிழமை சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தொழிலதிபர் A.K. துரைரத்தினத்தின் (A.K.S) அவர்களின் பாசமிகு மனைவியும், ஸ்ரீலவன் (லண்டன்), ஸ்ரீரங்கன் (லண்டன்), துசித்தா (லண்டன்), ஸ்ரீசுடரோன் (சூட்டா - இயக்குநர் - Bridge Academy (Pvt) Ltd -இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மைதிலி, துஷ்யந்தி, சிவசுரதன், கவிதா ஆகியோரின் மாமியும், கரிஸ்கோபி, ஸ்ரீநிகேதன், பிரதன்யா, வைசாலி, வாகீஸ், அக்ஷோபன், ஆகர்ஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மீனாம்பிகை, திலகவதி மற்றும் சிவகுமாரன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற A.K. சுந்தரம் மற்றும் A.K. சுபாரட்ணம், நாகரத்தினம் பரமகுரு, காலஞ்சென்றவர்களான A.K. இராசையா, சிதம்பரநாதன் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2024) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



**கந்தையா வீதி,**
**சாவகச்சேரி.**

**லவன் (மகன்)** - +44 797 109 5121
**ரங்கன் (மகன்)** - +44 798 544 4554
**ஸ்ரீ சுடரோன் (மகன்) சூட்டா** - 077 728 3772

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cr.43235) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்க தமிழ்
சிதறுண்டது போதும் தேசமாய் ஒன்றிணைவோம்
இனியொரு புதுவிதி செய்வோம்

இம்முறை தமிழர் வாக்கு
தமிழுக்கே என்றெழுவோம்!
சங்குக்கே வாக்களிப்போம்!

தமிழ்ப்பொது வேட்பாளர்
பா.அரியநேத்திரன்
-தமிழ் மக்கள்-

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 03 . 1936

இறப்பு 13 . 09 . 2024



## மங்களம் மகேஸ்வரி

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், சாத்தனார் கலட்டி அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மங்களம் மகேஸ்வரி கடந்த 13.09.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணி - தையலாம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் - குஞ்சம்மாள் தம்பதியினரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற மங்களம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், குமாரசுந்தரம், நாகேஸ்வரி, விஜயசுந்தரம், சின்னராசா, சோதிநாயகி, லோகநாதன் மற்றும் இராஜேஸ்வரி, லோகநாயகி, ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மிருநாளினி (ஓய்வு நிலை ஆசிரியர், கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்), ரோகிணி தேவி (ஜெர்மனி), ஶ்ரீபாலன், லிங்கபாலன், மணிசேகரன் (ஓய்வுநிலை அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி), காலஞ் சென்ற சந்திரசேகரன், நளாயினி (பிரான்ஸ்), ஈஸ்வரன் (ஜெர்மனி), தயாளன் (பெல்ஜியம்), காலஞ்சென்ற யாழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சச்சிதானந்தசிவம், காலஞ்சென்ற சிவஶ்ரீ, விக்கினேஸ்வரி (ஓய்வுநிலை உப அதிபர், கிளி/ பன்னங்கண்டி இ.த.க), சசிதாரமணி (ஆசிரியர் யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்), அகல்யா (யா/ கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்), பூபாலன் (பிரான்ஸ்), யசோதா(ஜெர்மனி), ராதிகா(பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், எழிலரசி -ஶ்ரீலிங்கேஸ்வரன் (பிரான்ஸ்), கோகிலன் - சிவனியா, வேனிலன், சௌந்தர்யா - நிர்மலன் (ஜெர்மனி), மிருதுளா - நிரோஜன் (ஜெர்மனி), ரிசாந்தினி, பகீஸ்வரி, விக்னேஷ், தீபிகா, தரண்யா, துஷாரா, தூயவன், வேந்துயன், வேந்தினி, டிலக்சன், தர்சிகன், நயனா, சந்துஜன், சதுர்ஷன், மதுஷன் ஆகியோரின் அன்பு பேத்தியாரும், ஜியா, தியான், பராவிகா, நிலா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2024) செவ்வாய்க்கிழமை சாத்தனார் கலட்டி, அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்பு:
077 7111 730

தகவல்:
குடும்பத்தினர்.

# தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக வட்டுக்கோட்டைக் கிளையும் அறிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 16

இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையும் தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேத்திரனுக்கு ஆதரவளிப்பதாக தீர்மானத்தை எடுத்துள்ளது.

வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் கூட்டமானது, தொகுதிக் கிளையின் தலைவர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது தமிழ்ப் பொதுவேட்பாளர் குறித்தான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அதனையடுத்து தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கியுள்ள அரியநேத்திரனை ஆதரவளிப்பதாக ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் அவருக்கு ஆதரவு தெரிவித்து மாபெரும் பரப்புரைக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை மூளாயில் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஓ-27)

# வேட்பாளர் ஊக்குவிப்பு பிரசாரத்துக்குத் தடை

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் மற்றொரு வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் பிரசாரம் செய்வது தேர்தல் சட்டத்துக்கு முரணானதெனத் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக வேட்புமனு சமர்ப்பித்துள்ள சில வேட்பாளர்கள் பிற வேட்பாளர்களுக்காக அல்லது அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பிரசாரம் செய்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதி வேட்பாளர்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஶ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச)

# கள்ள வாக்கு அளித்தால் தண்டப்பணமும் சிறையும்

கொழும்பு, செப். 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கள்ள வாக்கு அளிக்கும் நபர்களுக்கு 2023ஆம் ஆண்டு 21ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 12 மாதங்கள் வரை சிறை தண்டனையும் 2 இலட்சம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் அதிகமான கள்ள வாக்குகளை அளிக்க சிலர் முற்படகூடும் என பலக் கட்சிகள் தேர்தல்களை ஆணைக்குழுவிடம் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன.

கள்ள வாக்கு அளிப்பவர்களுக்கு 2 இலட்சம் ரூபா தண்டப்பணத்தை விதிக்க முடியும். அல்லது 12 மாதங்கள் சிறை தண்டனையை விதிக்க முடியும். அல்லது இரண்டு இலட்சம் அபராதத்துடன், தண்டனையையும் வழங்க முடியும். அவர்களுக்கு 7 ஆண்டுகள் வாக்களிக்கவும் வாக்காளர் பதிவேட்டில் பதியவும் தடைவிதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வறுமையை ஒழிக்க வேலைத்திட்டங்கள்

## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, செப். 16


இரண்டு வருடங்களுக்குள் வறுமையை ஒழிப்பதற்கான தேசிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சாதி, மத பேதமின்றி, இனவாதமின்றி அனைத்து சமூகத்தினரையும் அரவணைத்துச் செல்வேன். நுகர்வு, முதலீடு, உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஏற்றுமதி ஆகிய ஐந்து அம்ச திட்டங்களை முன்னிறுத்தி வேலைத்திட்டம் முன்னெடுப்பேன் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘நாம் தமிழர், - நமக்கு நாம்’ ஒன்றாக அணிதிரள்வோம்

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், செப். 16**

**இதுவரை ‘இலங்கையர் நாம்’ என்று தேர்தலில் கலந்து கொண்டோம். அது எமக்கு எந்த நன்மைகளையுந் தரவில்லை. வடக்கு- கிழக்கு தமிழ்ப் பேசும் மக்கள் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையினர் என்பதை மறந்து எம்மை வெறும் சிறுபான்மையினராகக் கருதி சிங்கள பௌத்த இன வாட்சியின் கனலை எம்மீது படர விட்டார்கள். அதனால் தான் நாம் இம்முறை ‘நாம் யார்’ என்ற கேள்விக்கு விடை அளிக்கும் விதத்தில் ‘நாம் தமிழர் நமக்கு நாம்’ என்ற குரலை எழுப்பியுள்ளோம் என்று நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரனுக்கு ஆதரவாக நெல்லியடி வாணிபர் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் முதன் முறையாகத் ‘தமிழ்ப்பேசும் மக்கள் நாம்’ என்ற அடிப்படையில் இந்தத் தேர்தலில் கலந்து கொள்கின்றோம். இதுவரை ‘இலங்கையர் நாம்’ என்று கலந்து கொண்டோம். அது எமக்கு எந்த நன்மைகளையுந் தரவில்லை. நாம் இதுவரை வாக்களித்த நபர்கள் நாம் வாக்களித்தோம் என்ற நன்றியறிதல் கூட இல்லாது பதவிக்கு வந்ததும் சிங்கள பௌத்த சிந்தனையில் மூழ்கிவிட்டார்கள்.

கட்சிகள் வேற்றுமையை வலுப்படுத்துவன. சுய நலத்தை உறுதிப்படுத்துவன. ஆனால் இந்தத் தேர்தல் கட்சிகள் கடந்து தமிழ்ச் சமூகமாகச் சிந்தித்து ஒற்றுமையை மையமாக வைத்து நாம் நடத்தும் தேர்தல். தமிழ் மக்களின் அல்லல்களை அறிவிக்கும் ஒரு தேர்தலாக மாற்றியுள்ளோம்.

எம்மைக் கிள்ளுக்கீரையாக இதுவரை பாவித்த தென்னவரை சிந்திக்க வைக்கும் தேர்தலாக இம்முறை மாற்றியுள்ளோம். நாடு நலம் பெற வேண்டுமென்றால் எம்மையும் சேர்த்துப் பயணிக்கவேண்டும் என்ற செய்தியை நாங்கள் இம்முறை வலுவாக வெளிப்படுத்தியுள்ளோம். இம்முறை ‘நாமில்லாமல் நீங்களா?’ என்ற கேள்வியை தென்னவர் முன் நாம் வைத்துள்ளோம்.

தமிழினத்திற்காக உழைக்கின்றோம். தமிழ் மொழிக்காக உழைக்கின்றோம்.

தமிழரின் தாயக பூமி பறிபோகின்றதே என்பதற்காக உழைக்கின்றோம்.

ஆகவே தமிழ் மக்கள் ஆகிய நாம் யாவரும் சுயநலம் களைந்து தமிழர் தம் பொது நலம் கருதி இந்தத் தேர்தலை எதிர்கொள்வோம்.

தவறாமல் வரும் 21 ஆம் திகதியன்று வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களித்து எமது உரிமையை வென்றெடுப்போம் - என்றார். (ச-100)





# தியாக தீபம் நினைவேந்தல் பருத்தித்துறையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 16

தியாக தீபம் திலீபனின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தியாக தீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் பருத்தித்துறை சுப்பர்மடத்தில் பொது நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுப்பர்மடம் பொது மண்டபத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் அலங்கரிக்கப்பட்டு தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது அப்பகுதி மக்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தியிருந்தனர். தொடர்ச்சியாக 12 நாள்களும் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-100)



# திருமூலர் அறநெறி பாடசாலை கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 16

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் இரண்டு மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட வவுனியா கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலையின் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். அத்துடன் ஒரு இலட்சத்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடப் பொருள்களும் நிகழ்வில் வைத்துக் குறித்த அறநெறிப் பாடசாலை நிர்வாகத்திடம் சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் வழங்கி வைக்கப்பட்டது. (ச-66)



# நாடாளுமன்ற மாதிரி விவாதம் யாழ். இந்துக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், செப். 16

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பீடத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் சனிக் கிழமை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான நாடாளுமன்ற மாதிரி விவாதச் சுற்றுப்போட்டி நடைபெற்றது.

போட்டியின் அரையிறுதியில் கொழும்பு றோயல் கல்லூரியையும், இறுதிப் போட்டியில் கொழும்பு இந்துக் கல்லூரியையும் எதிர்கொண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விவாதிகள் அணி வெற்றியைச் சுவீகரித்தது. உயர்தரப் பிரிவு மாணவர்களான ஜெயபாலன் தவேதன், இந்திரஜிற் கார்த்திகன், மகேந்திரன் திகழ்ஒளிபவன், ரவீந்திரன் ரேகிஷன் ஆகியோர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விவாதிகள் அணியில் இடம்பெற்றிருந்தனர். (ச-66)

# முழுநிலா கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 16

உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி சனசமூக நிலைய முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணிக்கு சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சனசமூக நிலையத் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சமூக மாற்றத்துக்கான செயற்பாட்டாளர் ம.செல்வின் ‘சமூகங்களை கட்டியெழுப்புதல்’ எனும் தொனிப்பொருளில் கருத்துரையாற்றவுள்ளார். (ச)

# அடுத்த வருடம் முதல் தாமதமின்றி பரீட்சைகள்



கொழும்பு, செப். 16

அடுத்த வருடம்முதல் அனைத்து பரீட்சைகளும் தாமதமின்றி நடைபெறும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஜனவரி 2 ஆம் திகதி பாடசாலைத் தவணை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மூன்றாவது தவணை இரண்டு வாரங்களுக்கு நடத்தப்படவேண்டும். சீருடை, பாடப்புத்தகம் என அனைத்தும் இப்போதே தயாராகிவிட்டன. கல்விப் பொதுத் தராதர பரீட்சை பெறுபேறுகளும் இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ச)

# மிதக்கும் சூரியசக்தி திட்டத்துக்கு அனுமதி

கொழும்பு, செப். 16

தற்போதுள்ள நீர் மூலங்களின் மேல் மிதக்கும் சூரியசக்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, மிதக்கும் சூரியசக்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரந்தெணிகல, மொரகஹகந்த மற்றும் கலாவாவி ஆகிய 3 பிரதான நீர்த்தேக்கங்களை ஆய்வு செய்து மஹாவலி அதிகாரசபை அடையாளம் கண்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## தியாகதீபம்...

ஆரம்பித்த நேரமான காலை 9.45 மணியளவில் ஈகச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமானது.

மூத்த போராளியும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான பொன் மாஸ்டர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் மாவீரர் கப்டன் றொசானின் தாயார் இரத்தினசிங்கம் பொற்கொடி ஈகச் சுடரேற்றி அஞ்சலித்தார். அதனைத் தொடர்ந்து திலீபனின் நினைவுத் தூபியின் மது அமைந்துள்ள அவரது உருவப்படத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை, தமிழ் தேசிய பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேந்திரன், முன்னாள் போராளி காக்கா அண்ணை என்று அழைக்கப்படும் மு.மனோகரன், ஜனநாயக போராளிகள் கட்சி உள்ளிட்ட குழுவினர் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைக் கூடங்களிலும் இராணுவப் பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அவசரகாலச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் ஆகிய ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து, தியாக தீபம் திலீபன் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அஹிம்சை வழியில் யாழ். நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-27-66)

# 95 கிலோ கஞ்சா மீட்பு

கிளிநொச்சி, செப். 16

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 95 கிலோ கேரளா கஞ்சா வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கஞ்சாவுடன் அதே வீட்டில் நின்றிருந்த கப் ரக வாகனத்தையும் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மற்றும் தடயப் பொருட்கள் என்பன பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(அ-ஒ-113)




தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தீர்த்தத் திருவிழா நேற்றுக்காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. பெருமளவு அடியவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஒ-66)

## என்ன...

நிறுவனத்தினருடன் என்ன டீல் செய்துள்ளார் என்பதை சஜித் உடனடியாக மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ரணில் பக்கம் தாவிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல சவால் விடுத்துள்ளார்.

'எனது 20 வருட அரசியல் வாழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும், சஜித் பிரேமதாஸவினதும் தலைமைத்துவத்துக்கு இடையிலான வித்தியாசத்தை கடந்த காலத்தில் உணர்ந்தேன். எனது சகோதரருக்கு கட்சியை உடைக்கும் நோக்கம் ஒருபோதும் இருக்கவில்லை. ஆனால் நான் கட்சியை உடைத்துக் கொண்டு சென்றேன். அந்தத் தவறை தற்பொழுது திருத்திக் கொண்டுள்ளேன். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவர்களுக்கே கொடுத்து விட்டு வந்துள்ளேன்" - என்றார். (அ-ஒ-இ)

## பொது...

அனுப்பியுள்ளனர். பிரதிப் பொலிஸ்மா அதிபரால் சிங்களத்தில் இந்தக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்முறை தேர்தலில் அரியநேந்திரன் மீதான மக்கள் செல்வாக்கின் நிமித்தம் அவர் உயிருக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என்று அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் கலந்துகொள்ளும் பொதுமக்கள் சந்திப்பு மற்றும் நிகழ்வுகளின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் போது அந்த விடயங்கள் குறித்து அவதானம் செலுத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடுவதால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் அதிருப்தியில் இருப்பதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே பொது விடயங்களின் கீழ் அச்சுறுத்தல் இருப்பதாகவும், அது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## மத்திய...

இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்ட திட்டங்களை நடத்துகின்றது அல்லது நடத்தியுள்ளது என்ற காரணத்தால் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரமிட் திட்டங்களில் பங்குபற்றுவது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும் என்ற தலைப்பின் கீழேயே இந்த தடை அறிவித்தலை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது. (அ-ஒ-இ)

## நன்கொடையாளர்...

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, அபிவிருத்தியை கொண்டு வருவதற்கு வேறெந்தத் தலைவரும் செய்யாத விடயத்தை நாம் செய்வோம். நாம் அதிகாரத்துக்கு வந்த பிறகு வடக்கு - கிழக்கு மக்களை மையப்படுத்தியதாக சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை கூட்டுவோம். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேசத்தை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வோம். இவ்வாறு ஒன்பது மாகாணங்களையும் அபிவிருத்தியடையச் செய்ய நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ-ஒ-இ)

## 2 மாதங்களில்...

நேற்றுமுன்தினம் இரவும் வட்டக்கச்சியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, வீதியின் வளைவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது. வட்டக்கச்சி மாயவனூர் பகுதியைச் சேர்ந்த கண்ணதாசன் கபிலன் (வயது-21) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் இரு மாத காலத்துக்குள் விபத்துகளால் ஏழுபேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-ச-113)

## பரீட்சைப்...

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று (நேற்று) பிற்பகல் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. இந்த ஆண்டுக்கான பரீட்சைக்கு 3 இலட்சத்து 23 ஆயிரத்து 841 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்ததுடன், நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 849 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-66)

## நாட்டு...

கண்டியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2022ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது நாடாளுமன்ற அதிகாரத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தபாடுபட்டேன். இன்று நாட்டைக் கட்டியெழுப்பும் புரட்சியை முன்னெடுப்பதற்காக மக்களின் ஆணையைக் கோருகின்றேன்.

ஜனாதிபதிப் போட்டியில் இருந்து நான் ஒதுங்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தி பொய்ப் பரப்புரை முன்னெடுக்கின்றது. நான் சஜித் மற்றும் அநுரவைப் போன்று ராஜினாமா செய்யும் அல்லது ஓடிப்போகும் நபரல்லர். பின்வாங்கி ஓடிச் செல்லாமல் துணிச்சலோடு முன்னோக்கிப் பயணிக்கும் பாடத்தை மட்டுமே சஜித்துக்கு கற்பிக்க முடியாமல் போயுள்ளது. அதனைக் கற்பதற்காக என்னுடன் சஜித் இணைந்து கொள்ளட்டும்.

சஜித்தும் அநுரவும் மாற்றம் பற்றி பேசினாலும், நாட்டுக்கு நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டமே தேவை. எதிர் வரும் 5 வருடங்களில் இந்த நாட்டில் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தி புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவேன் - என்றார். (அ-ஒ-இ)

## வல்லிபுர...

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெறும். தொடர்ந்து சுவாமி தேரில் எழுந்தளி உலா வருவார்.

சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கற்கோவளம் வங்கக் கடலில் இடம்பெறும். இதற்கான வசந்த மண்டபப் பூசை மாலை 4 மணிக்கு இடம்பெற்று தீர்த்த மாடுவதற்குச் சுவாமி மாலை 5 மணிக்கு வங்கக் கடல் நோக்கி புறப்படுவார். மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆலய வளாகத்திலுள்ள கேணியில் பட்டுத் தீர்த்தம் நடைபெறும். அன்றைய தினம் மாலை 5 மணிக்குக் கொடியிறக்கம் இடம்பெறுவதுடன் பெருந்திருவிழா நிறைவுறும்.

தேர், தீர்த்த உற்சவங்களை முன்னிட்டு பக்தர்களின் வசதி கருதி விசேட போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஆலயச் சுற்றாடலிலுள்ள அன்னதான மடங்களில் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-66)

## சஜித்தின்...

இந்தக் கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இராதாகிருஸ்ணன், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரும் பங்கேற்றனர். (அ-ஒ-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரயில் மோதி ஒருவர் பலி

கொழும்பு, செப். 16
தெஹிவளை ரயில் நிலையத்துக்குள் அருகில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மருதானையிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)


## காணி தேவை

**பூநகரி, மன்னார்**
பகுதிகளில் காணி தேவை.

**077 374 4652**

## காணி விற்பனைக்கு


**யாழ் சாவகச்சேரியில் 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A9 வீதியில் இருந்து கல்வயல் சொல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்
- A9 வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சாவகச்சேரி பஸ் நிலையம் 1 1/2 k.m தூரம்
- சாவகச்சேரி மகளிர் பாடசாலை 1 k.m தூரம்

தொடர்பு: 077 294 1521
077 329 4130


## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 06 . 1949



மறைவு 15 . 09 . 2024

**அமரர் கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா**

(ஓய்வு பெற்ற பட்டய பொறியியலாளர்-Chartered Engineer)

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் 15.09.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி-நவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயராணி (ஓய்வு பெற்ற சிரேஷ்ட வைத்திய அதிகாரி-யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு கணவரும் சங்கீதா (UK) (முன்னாள் விரிவுரையாளர்-University College of Jaffna) சுலக்ஷனா (பொறியியலாளர்-வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்), யதுநந்தன், சாம்பவி (Norway) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தன் (UK), தினேஷ் (Norway) ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கீர்த்தன் (UK) அவரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பாலகுமாரன் மற்றும் பாலசரஸ்வதி அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.09.2024 புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


பிராமனோடை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 114 4176**

(CS 29003) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 12 . 1946



மறைவு 14 . 09 . 2024

**கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

(இளைப்பாறிய மருதங்கேணி பிரதேச சபை, ஊழியர்)

யாழ். வத்திராயன் தெற்கைப் பிறப்பிடமாகவும், மருதங்கேணி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (14.09.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், துஷ்யந்தி (ஜேர்மனி), சிவாஜினி, துஷ்யந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வச்சந்திரன், ராஜினி, ரஞ்சித் ஆகியோரின் மாமனாரும், சந்தியா (ஜேர்மனி), கிரியா (ஜேர்மனி), டிலக்சனா (இலங்கை) ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், ஆரணி (ஜேர்மனி), ஆதிரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான இந்திராணி, அம்பிகாபதி, பசுபதியம்மா, திருஞானசம்பந்தர் (துரை - நோர்வே) மற்றும் பாலச்சந்திரன் (நோர்வே), பாலசுந்தரம் (டென்மார்க்), மகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் மருதங்கேணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்**
Mobile +9477 0869 850

(cs 56221) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 04 . 1946



மறைவு 14 . 09 . 2024

**சுப்பையா நடராஜா**

வன்னியசிங்கம் வீதி, இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் தொட்டியடி விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நடராஜா நேற்றுமுன்தினம் (14.09.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், மல்லிகாவின் அன்புக் கணவரும், Dr.சுபாசினி (குழந்தை வைத்திய நிபுணர் - தெல்லிப்பளை), ஜெயகாந்தன் (ஆசிரியர் - யூனியன் கல்லூரி), சங்கீதா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. சசிதரன், பிரபாகரன், வத்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, செல்வரட்ணம், சரஸ்வதி, தேவநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகநாதன், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சிறீபதி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகலனும், இந்திராணி, கமலராணி, யோகராணி, இதயவதி ஆகியோரின் மைத்துனரும், சாகரி, ஜஸ்மிதா, அஜய், அபிராம், கபிலன், அகிலன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இணுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு.

தகவல்:
**குடும்பத்தினர்**
**மகன் - 077 316 4504**
**மகள்- 077 345 6779**

(Cr/43225) N-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org